# DEPOSITION OF WITNESS

***IN THE COURT OF PRINCIPAL DISTRICT JUDGE, TIRUNELVELI.***

**O.S. No. 138 / 2018**

| | | |
|---|---|---|
| வா.சா.3 | – | சாமுவேல்ராஜ் |
| தந்தை பெயர் | – | முப்பிடாதி |
| கிராமம் | – | கோரிப்பள்ளம், பாளையங்கோட்டை |
| தாலுகா | – | பாளையங்கோட்டை |
| தொழில் | – | கட்டிட ஒப்பந்ததாரர் |
| வயது | – | 57 |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tmt.P.Maheswari in accordance with the Provisions of Act X of 1873 on **the 30th day of June 2026.**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன். சாட்சி சம்மனில் சொல்லப்பட்டுள்ள வேலாயுதம் என்பவரை எனக்குத் தெரியும். அவர் எனக்கு நண்பர் தான். வேலாயுதம் என்பவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவருக்கு ஒப்பந்ததாரர் என்ற முறையில் அவருக்கு வீடு கட்டி கொடுத்தேன். வீடு கட்டிக் கொண்டிருக்கும்போது அவர் இறந்துவிட்டார். அந்த வீடு கட்டும் வேலை முடிக்காமல் பாக்கி இருக்கிறது. வீடு கட்ட வேண்டிய பாக்கி குறித்து நான் வாதியிடம் சென்று குறிப்பிட்டேன். அவர் அந்த பாக்கியை கொடுத்தார். அதன்படி நான் வீடு கட்டி கொடுத்துவிட்டேன். வாதியிடம் நான் ரூ.2,50,000/– பெற்றுக் கொண்டதற்காக 24.12.2015 அன்று நான் எழுதிக் கொடுத்த பணப்பற்று ரசீது என்னிடம் காட்டப்படுவது தான். அது

ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.10 தான். என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.) வா.சா.ஆ.11.

(வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகின்றது.)